**மீளெழுச்சி செயற்றிட்டம் (கலவரத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமுக வாழ்வாதாரங்கள் செயற்றிட்டம்) - 2012**

---

**1. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2012 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2012 திசெம்பா் 31 இல் முடிவடைந்த ஆண்டில் விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததென்பதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவையாக சமா்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஈஎஸ்) மீது நியாயயூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியும் என்றும்

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஊ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

கணக்காய்விற்குச் சமா்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் என்பவற்றின்படி, 2012 திசெம்பா் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 4,094,102,426 ஆனதுடன் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 11,457,037,272 ஆகும். மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் மீதான செலவினம். முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | கூறுகள் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|
| | | 2012 | 2011 | |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) | சிவில் வேலைகள் | 2,966,078,625 | 294,328,683 | 5,297,226,671 |
| (ஆ) | பொருட்களும் உபகரணங்களும் | 28,559,725 | இல்லை | 365,006,732 |
| (இ) | ஆலோசனைச் சேவைகள் | 162,015,760 | 106,304,287 | 764,356,397 |
| (ஈ) | அதிகரிப்பவை | 190,425,231 | 180,059,230 | 3,851,366,429 |
| (உ) | உப மானியங்கள் | 747,023,085 | 777,094,861 | 923,142,899 |
| (ஊ) | வெள்ளச் சேதம் | இல்லை | 255,938,144 | 255,938,144 |
| | மொத்தம் | 4,094,102,426 | 1,613,725,205 | 11,457,037,272 |

## 2.2 விசேட (டொலர்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதான விசேட (டொலர்) கணக்கின் செயற்பாடுகள் கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| | 2012 | |
|---|---|---|
| | யூ.எஸ்.டொலர் | ரூபா |
| 2012 சனவரி 1 இல் உள்ளவாறான மீதி | 3,120,605 | 355,441,036 |
| கூட்டு : மீள் நிரப்பல்கள் | 37,767,000 | 4,708,064,823 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 160,966,299 |
| | 40,887,605 | 5,224,472,158 |
| கழி :பற்றுதல்கள் | (32,496,064) | (4,157,396,877) |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 8,391,541 | 1,067,075,281 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கீழே தரப்பட்ட விபரங்களின்படி 3935 ஆம் இலக்க கடன் உடன்படிக்கைக்காக தயாரிக்கப்பட்ட ஐந்தொகைக்கும் சம்பந்தப்பட்ட பட்டோலைகளுக்கும் இடையில் கீழே விபரங்கள் தரப்பட்டவாறு வித்தியாசங்களை அவதானிக்கப்பட்டன. இந்த வித்தியாசங்களை இணக்கம் செய்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்காததுடன் 2013 மே 31 வரையும் கணக்குகள் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

| விபரங்கள் | ஐந்தொகையின்படி செலவினம் | பட்டோலையின்படி செலவினம் | விதிதியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 320,162,665 | 320,475,860 | (313,195) |
| ஆலெசனை சேவைகள் | 157,402,043 | 157,341,721 | 60,322 |
| அதிகரிப்பவை | 190,374,807 | 190,121,935 | 252,872 |

## 4. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 4.1 நிதிகளின் பயன்பாடு

செயற்திட்டத்திற்காக சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் கடனளிக்க உடன்பட்ட தொகை ஐ.அ.டொலர் 141.14 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின்போது ஏற்பட்ட செலவு ரூபா 4,105,237,707 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 11,457,037,272 ஆக இருந்தது.

2012 ஆம் ஆண்டிற்கான இலங்கை அரசாங்கத்தின் ஆண்டு மதிப்பீட்டில் தலைப்பு இலக்கம் 105 – பொருளாதார அபிவிருத்தி அமைச்சு – நிகழ்ச்சித்திட்டம் - 02 அபிவிருத்தி நடவடிக்கைகள் கருத்திட்டம் - 03 விசேட அபிவிருத்திச் செயற்திட்டங்கள் என்பதன் கீழ் ரூபா 4,300,000,000 ஆன ஏற்பாடு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. 2005 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான ஏற்பாடுகளும் உள்ளபடியான செலவுகளும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | | ஏற்பாடு | | செலவு | | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| 2005 | | | 381,000,000 | | 284,354,595 | 74 |
| 2006 | | | 1,200,000,000 | | 628,876,712 | 52 |
| 2007 | ஆர்எவ்ஏ | 1,400,000,000 | | 689,743,295 | | |
| | ஜிஓஎஸ்எல் | 400,000,000 | 1,800,000,000 | 147,988,958 | 837,732,253 | 47 |
| 2008 | ஆர்எவ்ஏ | 848,100,000 | | 610,017,964 | | |
| | ஜிஓஎஸ்எல் | 128,190,000 | 976,290,000 | 110,503,900 | 720,521,864 | 78 |
| 2009 | ஆர்எவ்ஏ | 1,175,000,000 | | 114,933,219 | | |
| | ஜிஓஎஸ்எல் | 150,000,000 | 1,325,000,000 | 1,167,986,711 | 1,282,919,930 | 97 |
| 2010 | ஆர்எவ்ஏ | 1,000,000,000 | | 873,878,223 | | |
| | ஜிஓஎஸ்எல் | 125,000,000 | 1,125,000,000 | 106,431,568 | 980,309,791 | 87 |
| 2011 | ஆர்எவ்ஏ | 1,450,000,000 | | 1,403,885,170 | | |
| | எவ்ஏஎல் | 900,000,000 | | - | | |
| | ஜிஓஎஸ்எல் | 187,500,000 | 2,537,500,000 | 183,596,477 | 1,587,481,647* | 63 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2012 | ஆர்எவ்ஏ | 1,100,000,000 | | 1,009,650,000 | | |
| | எவ்ஏஎல் | 3,000,000,000 | | 2,887,170,000 | | |
| | ஜிஓஎஸ்எல் | 200,000,000 | 4,300,000,000 | 179,960,000 | 4,076,780,000* | 95 |
| | மோத்தம் | | | | 10,398,976,792* | |

* நலனாளிகளின் பங்களிப்புத் தொகை தவிர்க்கப்பட்டமை காரணமாக இந்த அறிக்கையின் பந்தி 4.1 இல் காட்டப்பட்ட தொகைகளிலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட தொகைகள் வேறுபடுகிறன.

## 4.2 மனிதவள முகாமைத்துவம்

4.2.1 செயற்திட்ட பதவியணியினரின் சுயவிபரக் கோவைகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகிறன.

(அ) உத்தியோகத்தரின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் மற்றும் அநுபவங்கள் என்பன உரிய அதிகாரிகளிடமிருந்து உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்துடன் இணைக்கப்பட்ட 08 உத்தியோகத்தர்கள் தொடர்பில் செயற்திட்டத்தால் அத்தகைய உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அடையாள அட்டைகள் மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் பிரதிகள் சுயவிபரக் கோவைகளில் கோவையிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அத்தகைய ஆவணங்கள் செயற்திட்டததுடன் இணைக்கப்பட்ட 08 உத்தியோகத்தர்கள் தொடர்பில் செயற்திட்டத்தால் பெறப்பட்டிருக்கவில்லை.

### 4.2.2 இயலளவை கட்டியெழுப்புதல்

இந்தியாவில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (2012 மார்ச் 25 இலிருந்து 2012 ஏப்ரல் 04 வரை மற்றும் 2012 யூன் 10 இலிருந்து 24 வரை)

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியோரால் கற்கை சுற்றுலா அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சிவில் வேலைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | செயற்திட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட தொகை | கணக்காய்வு அவதானிப்புகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| அ | சடயன்தலாவா அணைக்கட்டு மற்றும் எல்பீ அணை என்பவற்றின் புனரமைப்பு | 8,850,000 | (i) அணைக்கட்டு மீது நிர்மாணக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.<br>(ii) மண் பரிசோதனை அறிக்கை பெறப் பட்டிருக்கவில்லை<br>(iii) அணைக் கட்டு நிர்மாணத்திற்காக 1 ஆம் தர மண் பயன்படுத்தப்பட வேண்டும் ஆனால் மிகவும் குறைந்த தரமுடைய மண்ணே நிர்மாணத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.<br>(iv) அணைக்கட்டு மழை நீரில் கழுவிச் செல்லப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது |
| ஆ | கால்வாய் கிராமம் -02 வடிகாலமைப்பு புனரமைப்பு | 2,256,262 | (i) வடிகாலமைப்பின் பக்கச் சுவரில் நிர்மாணக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.<br>(ii) மதிப்பிடப்பட்ட திட்டத்தின்படி, வடிகாலமைப்பு முறையின் பக்க சுவர்களின் அகலம் 5 அங்குலத்தில் மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், 4 அங்குல அகலத்தில் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| இ | ராஜவேவா குளப் புனரமைப்பு | 6,861,429 | (i) மதிப்பிடப்பட்ட விடய இல 2.1 இன்படி, அணைக்கட்டு வீதியில் கிரவல் இடப்படல் வேண்டும் ஆனால், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | | (ii) மண் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| ஈ | பொறபொத்த பொக்குறுகம இணைப்பு வீதி நிர்மாணம் | 3,711,282 | வீதியின் அகலம் 10 அடியில் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 64 மீற்றர் வீதியின் அகலம் 9 அடி முதல் 9.9 அடி வரையான வீச்சில் செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. |

### 4.3.1 பூம்புகார் கண்ணகை அம்மல் கோவில் வீதி நிர்மாணம் (மட்டக்களப்பு)

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 12 ஆவது ஒழுங்கை

(i) வீதியில் பாரதூரமான வெடிப்புகள் அவதானிக்கப்பட்டன.

(ii) வீதியின் அடிச்சுற்றிவளம் முறைப்படி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வீதியின் குறிப்பிடத்தக்களவு பகுதி உடைந்திருந்ததுடன் மூன்று இடங்களில் வீதியிலிருந்து விலகியிருந்தது.

(iv) மதிப்பீட்டின்படி, வீதியின் அகலம் 3.6 மீ இல் இருக்க வேண்டிய போதிலும் அது 2.99 மீ முதல் 3.05 மீ வரையான வீச்சில் இருந்தது.

(ஆ) 6 ஆவது ஒழுங்கை

(i) மதிப்பீட்டின்படி, வீதியின் அகலம் 3.5 மீற்றரில் இருக்க வேண்டிய போதிலும் அது 3 மீற்றராக மாத்திரமே இருந்தது.

(ii) வீதி அடி அத்திவாரம் மதிப்பீட்டின்படி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) மதிப்பீட்டின்படி அத்திவாரக் கிரவலிடல் ரூபா 614,880 பெறுமதியான 768.6 கனமீற்றர் கிரவல் அலகுகள் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அதில் 60 கனமீற்றர் அலகு கிரவல் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், வீதியானது சிறிதளவு மழை நாளில்கூட வெள்ளத்தில் மூழ்கியிருந்தது.

(இ) 5 ஆவது ஒழுங்கை

(i) வீதியில் வெடிப்புகள் அவதானிக்கப்பட்டன.

(ii) மதிப்பீட்டின்படி, வீதியின் அகலம் 3.5 மீற்றரில் இருக்க வேண்டிய போதிலும் அது 3 மீற்றராக மாத்திரமே இருந்தது.

### 4.3.2 பொலி நெற் வீடுகளின் நிர்மாணம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒப்பந்தகாரருடன் செய்துகொள்ளப்பட்ட 2011 யூலை 08 ஆந் திகதிய ஆர்ஏபீ/பீஎம்யூ/என்சீபீ/பொறி/2010/10 ஆம் இலக்க உடன்படிக்கையின்படி, வேலைகள் 30 நாட்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டியதுடன் குறைபாட்டுப் பொறுப்புக் காலப்பகுதி 365 நாட்களாக இருக்கவேண்டும். எவ்வாறாயினும் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் சேதமடைந்த வீடுகள் மீள நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| வடக்கு மாகாணம் | 95 |
| திருகோணமலை மாவட்டம் | 25 |
| மொத்தம் | 120 |

உத்தரவாத காலம் 3-8 ஆண்டுகளாக இருந்தது ஆனால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் திருத்த வேலைகள் இன்னொரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) திருகோணமலை மாவட்ட பொலிநெற் கால்வாய்கள்

(i) உத்தரவாத காலம் 3-8 ஆண்டுகளாக இருந்தது ஆனால் 5 கால்வாய்கள் சேதமடைந்திருந்ததுடன் 20 கால்வாய்கள் பகுதியளவில் சேதமடைந்திருந்ததென பௌதீக மெய்மையாய்வில் அவதானிக்கப்பட்டது.

(ii) ஒரு தனியார் கம்பனியால் ரூபா 16,803,820 ஆன குறைந்த கேள்வித் தொகை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தம் ரூபா 30,496,620 விலை குறித்த இன்னொரு தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) ஒப்பந்த உடன்படிக்கையின் 39 மற்றும் 40 ஆம் பிரிவுகளிற்கு முரணாக 05 விடயங்களின் மதிப்பிடப்பட்ட அளவுகள் மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 116,200 முதல் ரூபா 131,180 வரை கொடுப்பனவுகள் அதிகரித்திருந்தன.

(iv) ஒப்பந்த உடன்படிக்கையின்படி, வேலைப் பூத்தியாக்கல் திகதி 2011 ஆகஸ்ட் 08 ஆக இருந்தது. ஏவ்வாறாயினும் வேலைகள் 2012 ஆகஸ்ட் 23 இலேயே பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் தாமதக்கட்டணங்கள் கொடுப்பனவுகளிலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3.3 அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் (வீடிஓ) முகாமைத்துவம்

(அ) ஐந்து கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அவர்களுடைய கொடுக்கல் வாங்கல்களிற்காக வங்கி நடைமுறைக் கணக்கினை பேணியிருந்தன. ஏவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான வங்கிக்கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஐந்து கிராம அபிவிருத்திச் சங்கங்களால் இருப்புப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் பர்ச்சாகேல்ல கிராம அபிவிருத்திச் சங்கத்தால் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பௌதீக செயலாற்றல்

கணக்காய்விற்கு தரப்பட்ட தகவலின்படி, கிராமிய புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி மற்றும் வெள்ள சேத புனரமைப்பு என்பன தொடர்பாக செயற்திட்டத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயலாற்றல் கீழே தரப்படுகின்றது.

(அ) கிராமப் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி

| மாவட்டம் | நீர்பாசனம்/ கால்வாய்/ அணை/ குளக்கட்டு/ நீர்க்கசிவு/ ஒழுக்கு/ உட்புற தடுப்பு அணை (எண்ணிக்கை) | | கிராம வீதி (கிமீ) | | மதகு/ பாலம்/ வடிகால் (எண்ணிக்கை) | | கிணறுகள்/ நீர் வழங்கல் திட்டங்கள;/ விவசாயக் கிணறுகள் (எண்ணிக்கை) | | பல நோக்க கட்டிடம்/ வாழ்வாதார அபிவிருத்தி நிலையம்/ கைத்தொழில்/ சந்தைப்படுத்தல் நிலையம் (எண்ணிக்கை) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இலக்கு | பூர்த்தியாக்கப்பட்டது | இலக்கு | பூர்த்தியாக்கப்பட்டது | இலக்கு | பூர்த்தியாக்கப்பட்டது | இலக்கு | பூர்த்தியாக்கப்பட்டது | இலக்கு | பூர்த்தியாக்கப்பட்டது |
| அம்பாறை | 17 | 14 | 80.35 | 76.89 | 45 | 26 | 62 | 56 | 28 | 26 |
| மட்டக்களப்பு | 17 | 17 | 80.98 | 79.6 | 17 | 12 | 71 | 61 | 33 | 33 |
| திருகோணமலை | 16 | 15 | 101.18 | 99.37 | 82 | 16 | 71 | 63 | 33 | 26 |
| வவுனியா | 03 | 03 | 185.29 | 181.48 | - | - | 113 | 113 | 65 | 63 |
| மன்னார் | 14 | 14 | 136.77 | 135.67 | 05 | 05 | 79 | 73 | 113 | 103 |
| கிளிநொச்சி | 20 | 20 | 60.73 | 56.63 | 11 | 05 | 64 | 63 | 85 | 77 |
| முல்லைத்தீவு | 23 | 23 | 95.28 | 86.26 | 01 | 01 | 70 | 55 | 106 | 92 |
| யாழ்ப்பாணம் | 08 | 07 | 110.42 | 109.55 | 03 | 03 | 598 | 596 | 71 | 62 |
| அநுராதபுரம் | 31 | 24 | 98.59 | 54.89 | - | - | 41 | 29 | 21 | 18 |
| பொலநறுவை | 09 | 08 | 66.03 | 59.24 | 06 | 06 | 19 | 19 | 17 | 16 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புத்தளம் | 16 | 15 | 105.94 | 100.4 | 44 | 29 | 24 | 21 | 21 | 21 |
| மொனறாகலை | 04 | 04 | 149.02 | 101.01 | 06 | 06 | 66 | 58 | 16 | 16 |

(ஆ) வெள்ளச் சேத புனரமைப்பு (எவ்டிஆர்)

| **நடவடிக்கைகள்** | **இலக்கு** | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பூர்த்தியாக்கல்** | **சதவீதம்** |
|---|---|---|---|
| | **எண்ணிக்கை** | **எண்ணிக்கை** | |
| வாழ்வாதார மீளமைப்பு நடவடிக்கைகள் (பொலி நெற் வீடுகளின் தாபிப்பு) | 800 | 356 | 44.5 |
| நீர்ப்பாசனத் திட்டங்களின் புனரமைப்பு | 255 | 103 | 40.4 |
| கிராம வீதிகளின் புனரமைப்பு | 628 | 398 | 63.4 |
| குடி தண்ணீர் திட்டங்களின் புனரமைப்பு | 79 | 29 | 36.7 |

## 4.6 வாழ்வாதார உதவியின் (எல்எஸ்ஏ) கீழான கடன்கள் அறவிடப்படாமை

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 12 மாவட்டங்களில் பல்வேறு நோக்கங்களிற்காக வாழ்வாதார நடவடிக்கைகள் திட்டங்களின் கீழ் செலுத்தப்பட்ட கடன்கள் பெற்றவர்களிடமிருந்து ரூபா 85.00 மில்லியன் தொகை 03 மாதங்களிற்கு மேல் நிலுவையாகவிருந்த கடன்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் உரிய பெறுனர்களிடமிருந்து கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு செயற்திட்டத்தால் போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மாவட்டங்கள் | முன்மாதிரி கிராமங்கள் | வழங்கப்பட்ட கடன்கள் | | மேற்கொள்ளப்பட்ட அறவீடுகள் | | நிலுவையாக இருந்த கடன்கள் | 3 மாதங் களிற்கு மேலாக நிலுவையாக இருந்த கடன்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | ரூபா மில் | எண்ணிக்கை | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| அம்பாறை | 25 | 1,778 | 32.84 | 1,968 | 37.90 | 23.25 | 5.42 |
| மட்டக்களப்பு | 25 | 2,895 | 42.09 | 4,116 | 87.85 | 31.66 | 9.28 |
| திருகோணமலை | 25 | 2,090 | 51.34 | 2,644 | 76.85 | 51.29 | 8.69 |
| வவுனியா | 40 | 2,776 | 67.78 | 2,102 | 60.78 | 53.35 | 21.77 |
| மன்னார் | 40 | 2,985 | 76.06 | 3,174 | 91.79 | 39.95 | 9.46 |
| யாழ்ப்பாணம் | 40 | 2,450 | 67.81 | 3,306 | 113.87 | 60.04 | 7.16 |
| அநுராதபுரம் | 25 | 2,708 | 51.60 | 3,821 | 102.70 | 43.40 | 8.98 |
| பொலநறுவை | 25 | 2,089 | 45.33 | 2,763 | 65.97 | 35.37 | 5.25 |
| புத்தளம் | 26 | 1,769 | 42.70 | 1,915 | 69.12 | 37.47 | 7.24 |
| மொனறாகலை | 25 | 2,124 | 48.56 | 2,346 | 65.80 | 49.75 | 1.75 |
| மொத்தம் | **296** | **23,664** | **526.11** | **28,155** | **772.63** | **425.53** | **85.00** |

## 5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) ஒப்பந்த நிர்வாகம்

(இ) காசு முகாமைத்துவம்